நகராட்சி அலுவலகம்,
களக்காடு.
நாள். 19.02.2026.

களக்காடு நகராட்சி மன்றத்தின் சாதாரணக் கூட்டம் 2026ம் வருடம் பிப்ரவரி மாதம் 25ம் தேதி புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும்.

**முன்னிலை: திருமதி. கா. சாந்தி, எம்.ஏ., பி.எட்.,**
**நகர்மன்ற தலைவர்**
**களக்காடு நகராட்சி.**

| **நாள்.** | **தீர்மான எண்.** | **மன்ற பொருள்** | **மன்றத்தின் முடிவு** |
|---|---|---|---|
| 25.02.2026 | 728 | **<u>மன்றப்பொருள்: 01</u>**<br>களக்காடு நகராட்சியில் பருவ மழை மற்றும் இயற்கை பேரிடர்களால் சேதமுற்ற சாலைகளை பராமரிக்கும் பொருட்டு விடுவிடுக்கப்பட்ட நிதியின் கீழ் (2024/2025) இந்நகராட்சிக்குட்பட்ட சிவசண்முகபுரம் வார்டு எண்.10ல் மேற்கொள்ளப்பட்ட தார் சாலைப்பணிகளை அரசு பொறியியல் கல்லுரரி அலுவலர்கள் மூலம் மூன்றாம் தரப்பு ஆய்வாக ஆய்வு செய்து ஆய்வறிக்கை பெற முதல்வர் அரசு பொறியில் கல்லுரரி பாளையங்கோட்டை அவர்களின் கேட்பு (Tax invoice/2026) நாள். 23.01.2026ன்படி ரூ.8850/-செலுத்தமன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2671/2024/இ1). | அனுமதிக்கப்பட்டது. |
| 25.02.2026 | 729 | **<u>மன்றப்பொருள்: 02</u>**<br>களக்காடு நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (Turip) 2025-2026ன் கீழ் பேவர் பிளாக் சாலைகள் அமைக்க நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 399/2026/SS1-5 நாள். 06.01.2026 ன்படி ரூ. 190 இலட்ச மதிப்பீட்டிற்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும், அதன் தொடர்ச்சியாக மேற்கண்ட பணிகளை இந்நகராட்சியில் மேற்கொள்ள 28.01.2026 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது. | குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய N.M. புஷ்பம் என்பவரது ஒப்பந்தப்புள்ளி அங்கீகரித்து ஒப்புக் கொள்ளப்பட்டது. |

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் | கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1. | களக்காடு நகராட்சிக்குட்பட்ட மஞ்சுவிளை காந்தி நகர் தெற்கு தெரு (3 சாலைகள்) மஞ்சுவிளை கிழக்கு தெரு (சாலை) மஞ்சுவிளை தெற்கு தெரு (1 சாலை) மஞ்சுவிளை சர்ச் தெரு வடக்கு பகுதி, மஞ்சுவிளை வடக்கு தெரு காமராஜ் நகர் (சாலை) பண்டிதன் குறிச்சி தெற்கு தெரு ( தெரு) கீழகருவேலன்குளம் களத்தடி ஹரிசன் தெரு (சாலை) பாரதிபுரம் மேற்கு தெரு வடக்கு (ரோடு) சுபாஷ்சந்திர போஸ்புரம் மேற்கு தெரு (சாலை) சுபாஷ் சந்திரபோஸ்புரம் மேற்கு தெரு 2 (2 சாலை) சுபாஷ் சந்திரபோஸ்புரம் மேற்கு தெரு3 ( சாலை) சிதம்பராபுரம் தேவேந்திரன் தெரு (முடுக்கு) சிதம்பராபுரம் ராஜபுதுரர் நாடர் மேற்கு தெரு முதல் குறுக்கு தெரு, சிதம்பராபுரம் கீழ ரதவீதி தெற்கு பகுதி, சிதம்பராபுரம் ஜவகர் தெரு (சாலை), சிதம்பராபுரம் தெற்கு ரதவீதி தெரு (சாலை), சிதம்பராபுரம் தெற்கு ரதவீதி தெரு1 (சாலை), சிதம்பராபுரம் தெற்கு ரதவீதி தெரு 2 (சாலை) சிதம்பராபுரம் தெற்கு ரதவீதி சாலை5 (சாலை) சிதம்பராபுரம் தெற்கு ரதவீதி சாலை 6 (சாலை) சிதம்பராபுரம் கீழ ரதவீதி தெரு, தெற்கு பகுதி 5, சிதம்பராபுரம் கீழ ரதவீதி தெரு, தெற்கு பகுதி 6, சிதம்பராபுரம் கீழ ரதவீதி தெரு, தெற்கு பகுதி 7, சிதம்பராபுரம் கீழ ரதவீதி தெரு, தெற்கு பகுதி ஆகிய தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி. | 190.00 | திரு. J.ஜஸ்டின் பிரதீப் | 1.06% கூடுதல் |
| 2. | | | திருமதி. N.M.புஷ்பம் | மதிப்பீட்டு விலைக்கு |

**<u>அலுவலக குறிப்பு:</u>** மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரித்து மன்றம் ஒப்புதல் செய்யலாம், திட்ட பணியாதலால் வேலை உத்திரவு வழங்கியதை ஒப்புக்கொள்ளலாம். (ந.க.எண்.3133/2025/இ1)

<table>
<tr>
<td>25.02.2026</td>
<td>730</td>
<td>
<u>மன்றப்பொருள்: 03</u>
களக்காடு நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (Turip) 2025-2026ன் கீழ் தார் சாலைகள் அமைக்க நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 399/2026/SS1-5 நாள்.06.01.2026-ன்படி ரூ.113.00 இலட்ச மதிப்பீட்டிற்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்குமாக அதன் தொடர்ச்சியாக மேற்கண்ட பணிகளை இந்நகராட்சியில் மேற்கொள்ள 28.01.2026 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr>
<th>வ. எண்.</th>
<th>பணியின் பெயர்</th>
<th>மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்)</th>
<th>ஒப்பந்ததாரர்கள்</th>
<th>கூடுதல் / குறைவு</th>
</tr>
<tr>
<td>1.</td>
<td rowspan="2">களக்காடு நகராட்சிக்குட்பட்ட ஆசாத்புரம் முதல் பத்தை ரோடு, குண்டேந்திரன் கிழக்கு தெரு ஆற்றுப்படுகை (சாலை) பத்தை முதல் குறுக்கு தெரு வடக்கு ( சாலை) நாடார் வடக்கு புதுத்தெரு (சாலை) சிதம்பராபுரம் வடக்கு ரதவீதி தெரு (சாலை) சிதம்பராபுரம் கிழக்கு ரதவீதி தெரு வடக்கு பகுதி ( சாலை) சிதம்பராபுரம் போஸ் தெரு கிழக்கு (சாலை) சிதம்பராபுரம் கீழ ரதவீதி தெரு தெற்கு பகுதி 1 (சாலை) சிதம்பராபுரம் கீழ ரதவீதி தெரு தெற்கு பகுதி 2 (சாலை) சிதம்பராபுரம் கீழ ரதவீதி தெரு தெற்கு பகுதி 3 (சாலை) ஆகிய தெருக்களில் தார் சாலை அமைக்கும் பணி.</td>
<td rowspan="2">113.00</td>
<td>திருமதி. S. பொன் மலர்</td>
<td>1.08% கூடுதல்</td>
</tr>
<tr>
<td>2.</td>
<td>திரு. P. மாடசாமி</td>
<td>மதிப்பீட்டு விலைக்கு</td>
</tr>
</table>
</td>
<td>குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய P.மாடசாமி என்பவரது ஒப்பந்தப்புள்ளி அங்கீகரித்து அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td><u>அலுவலக குறிப்பு:</u> மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரித்து மன்றம் ஒப்புதல் செய்யலாம் திட்ட பணியாதலால் வேலை உத்திரவு வழங்கியதை ஒப்புக்கொள்ளலாம்.<br>(ந.க.எண்.3133–1/2025/இ1).</td>
<td></td>
</tr>
<tr>
<td>25.02.2026</td>
<td>731</td>
<td><u>மன்றப்பொருள்: 04</u><br>களக்காடு நகராட்சியில் மாநில நிதிக்குழு மான்யம் பள்ளிகள் பராமரிப்பு (இயக்குதலும் பராமரித்தலும்) 2025–2026 திட்டத்தின் கீழ் களக்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.07, கீழக்கருவேலன்குளம் நகராட்சி தொடக்கப் பள்ளியில் கீழ்கண்ட பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 9733/2025/SS2 நாள்.19.01.2026ன்படி ரூ.19.40 இலட்ச மதிப்பீட்டிற்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்குமாக, அதன் தொடர்ச்சியாக கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள 09.02.2026 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எ ண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்)</th><th>ஒப்பந்த தாரர்கள்</th><th>கூடுதல் / குறைவு</th></tr>
<tr><td>1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 7 கீழக்கருவேலன்குளம் நகராட்சி தொடக்கப்பள்ளியில் பராமரிப்பு பணிகள் மற்றும் மேடை நடைபாதை, விளையாட்டு உபரகணங்கள் மேசை நாற்காலிகள் போன்ற வசதி எற்படுத்துதல்.</td><td rowspan="2">19.40</td><td>திருமதி. என்.எம்.புஷ்பம்</td><td>1.52% கூடுதல்</td></tr>
<tr><td>2.</td><td>திரு. A இராதாகிருஷ்ணன்</td><td>1.05% குறைவு</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u><br>மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம், திட்டபணியாதலால் வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.47/2026/இ1).</td>
<td>குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.A.இராதாகிருஷ்ணன் என்பவரது ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது. சட்டப்படி செயல்பட அனுமதி அளிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>25.02.2026</td>
<td>732</td>
<td><u>மன்றப்பொருள்: 05</u><br>களக்காடு நகராட்சி படலையார்குளம், FSTP அமைவிடத்தில் கட்டப்பட்டுள்ள புதிய நுன்னுர குடிலுக்கு MCC மின் இணைப்பு பெற தமிழ்நாடு மின்பகிர்மான கழக உதவி மின் பொறியாளர், களக்காடு அவர்களின் கேட்பு கடிதம் அ.எண். 43/2025 நாள். 10.02.2026ன்படி ரூ.255785/- (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பத்தி ஐந்தாயிரத்து எழுநூரற்று என்பத்தி ஐந்து மட்டும்) செலுத்த கோரப்பட்டுள்ளது. மேற்படி மேற்கண்ட கேட்பு கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:</u> மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்ய ஒப்புக்கொள்ளலாம்.</td>
<td>அரசு விதிப்படி செலவிட அனுமதி அளிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>25.02.2026</td>
<td>733</td>
<td><u>மன்றப்பொருள்: 06</u><br>களக்காடு நகராட்சியில் 2026-2027 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆண்டு பராமரிப்புகளுக்கான பணிகள் மற்றும் அதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>களக்காடு நகராட்சி 27 வார்டுகளிலும் பதிக்கப்பட்டள்ள குடிநீர் பிரதான குழாய்கள் மற்றும் பகிர்மான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் உடைப்புகள் மற்றும் கசிவுகளை சீர் செய்யும் பணி.</td><td>4.70</td></tr>
<tr><td>2.</td><td>களக்காடு நகராட்சியில் 27 வார்டுகளிலும் உள்ள மினி பவர் பம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சீர் செய்யும் பணி.</td><td>3.20</td></tr>
<tr><td>3.</td><td>களக்காடு நகராட்சியில் 27 வார்டுகளிலும் உள்ள அடிபம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சீர் செய்யும் பணி.</td><td>2.00</td></tr>
<tr><td>4.</td><td>களக்காடு நகராட்சியில் உள்ள 27 வார்டுகளிலும் விநியோகிக்கப்படும் குடிநீரில் குளோரிநேசன் செய்ய ஏதுவாக திரவ குளோரின் கொள்முதல் செய்யும் பணி.</td><td>3.00</td></tr>
</table></td>
<td>அரசு விதியினை பின்பற்றி செலவிட அனுமதி அளிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>5.</td><td>களக்காடு நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் நீரேற்று நிலையங்கள் மற்றும் திறந்தவெளி கிணறுகள், உள் வடி கிணறுகள், ஆகியவற்றில் உள்ள மின் மோட்டார்கள், மற்றும் மின் சாதன அமைப்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சீர் செய்யும் பணி.</td><td>1.68</td></tr>
<tr><td>6.</td><td>களக்காடு நகராட்சி, மூங்கிலடி கிணற்றிலிருந்து சுபத்ரா பூங்காவில் உள்ள குடிநீர் தொட்டிக்கு குடிநீர் கொண்டு வரும் குடிநீர் பிரதான குழாயினை பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு செய்யும் பணி.</td><td>5.00</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>19.58</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u> மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை 2026–2027 ஆம் நிதி ஆண்டுக்கான பொது நிதியில் இருந்து செலவு செய்ய ஒப்புக்கொள்ளலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>25.02.2026</td>
<td>734</td>
<td>
<u>மன்றப்பொருள்: 07</u>
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை அரசாணை (நிலை) எண். 10, நாள். 23.01.2023ன்படி நகராட்சியின் நிலைக்கு ஏற்ப ஒரே சீரான பணியிடம் தோற்றுவித்து வரையறைகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இப்பணியிடங்களில் காலிப்பணியிடங்களுக்கு ஏற்ப பொதுப்பிரிவு, பொது சுகாதாரப் பிரிவு மற்றும் பொறியியல் பணியின் கீழ் பணிபுரியும் ஓட்டுநர்கள், குடிநீர் பணி, தெருவிளக்கு பணி, இரவுக் காவலர்கள் முதலான பணியிடங்களில் தேவைக்கேற்ப வெளிக்கொணர்வு முகமை மூலம் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகராட்சியில் குடிநீர், தெருவிளக்கு, ஓட்டுநர், பொது சுகாதாரம் ஆகிய பணிகளை 20 நபர்களை கொண்டு பணி செய்து வரும் மகாத்மா காந்தி சுய உதவிக்குழு (பதிவு எண். SRG/ Cheranmahadevi/7/2025) 2026–2027ம் நிதியாண்டிற்கும் தொடர்ந்து பணிகளை செய்வதற்கு, 2025–2026ம் ஆண்டிற்கான திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறை ஆணை (ந.க.எண். R.C.M1/ 1640/ 2025)–ன்படி, நாள் ஒன்றுக்கான கூலி ரூ.540/– வீதம் வழங்கவும், மன்றத்தின் அனுமதிக்கு.
<u>அலுவலகக் குறிப்பு:</u>
2026–2027ம் ஆண்டிற்கு மகாத்மா காந்தி சுய உதவிக்குழு மூலம் குடிநீர், தெருவிளக்கு, ஓட்டுநர், பொது சுகாதாரம் ஆகிய பணிகளை 20 நபர்களை கொண்டு பணி செய்வதற்கும், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவரின்
</td>
<td>அரசு விதிப்படி செயல்பட அனுமதி அளிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | செயல்முறை ஆணை (ந.க.எண்.R.C.M1/1640/2025)–ன்படி, நாள் ஒன்றுக்கான கூலி ரூ.540/– வீதம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம். | |
| 25.02.2026 | 735 | **<u>மன்றப்பொருள்: 08</u>**<br>நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 32945/2022/EA2–SWM–9, நாள்.10.01.2023–ன்படி, களக்காடு நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மை பணிகளை வெளிக்கொணர்வு மூலம், தனியார் சேவை வழங்குநர் / நிறுவனம் / ஒப்பந்தக்காரர் ஆகியோர் மூலம் மேற்கொள்ள தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்த சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 படி ஒப்பந்தப்புள்ளி கோரி மேற்கண்ட திட்டத்தினை நடைமுறைப்படுத்த ஆணையிடப்பட்டதன் தொடர்ச்சியாக 14.03.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தகுதியான ஒப்பந்ததாரராக கே.ஆர்.எஸ். சர்வீஸ், சென்னை, என்ற நிறுவனம் தெரிவு செய்யப்பட்டு, நகரமன்றத்தீர்மானம் எண்.314 நாள். 08.06.2023ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு 01.04.2023 முதல் வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்கான் நகராட்சி நிருவாக இயக்குநரின் செயல்முறை ஆணையில் தெரிவு செய்யப்படும் தனியார் சேவை வழங்குநரின் ஒப்பந்தகாலம் ஒரு ஆண்டு எனவும், திட்ட செயலாக்கத்தினை மறு மதிப்பீடு செய்து தொடர்ச்சியாக மூன்ற ஆண்டுகளுக்கு ஒப்பந்தத்தினை நீட்டிப்பு செய்ய வழிவகை செய்யப்பட்டதின் அடிப்படையில் இந்நகராட்சியில் மேற்படி திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொண்டு வரும் நிறுவனமான கே.ஆர்.எஸ், சர்வீஸ், சென்னை என்ற நிறுவனத்தி ஒப்பந்தகாலம் 01.05.2023 முதல் 30.04.2024 நீடித்து வழங்கப்பட்டது விட்டது, அதன் தொடர்ச்சியாக நகர்மன்ற தீர்மானம் எண். 496, நாள். 30.08.2024 மற்றும் நகர்மன்ற தீர்மான எண். 573 நாள். 19.03,2025 ஆகிய தீர்மானங்களின் படி 30.04.2025 வரை கால நீட்டிப்பு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், நகர்மன்ற தீர்மான எண்.598, நாள்.29.04.2025ன்படி, 2025–2026ம் ஆண்டுக்கு 01.05.2025 முதல் 31.03.2026 வரை கால நீட்டிப்பு செய்ய அனுமதி வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் ஒப்பந்ததாரரின் பணிக்காலமானது முடிவுற்று மீண்டும் ஒப்பந்தம் கோர வேண்டியுள்ளது. தற்போது 2026 சட்டமன்ற தேர்தல் நடைபெறவுள்ளதால், ஒப்பந்தம் கோர இயலாத நிலை உள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக | அலுவலக குறிப்பினை ஏற்று சட்டப்படி செயல்பட அனுமதி அளிக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | | ஆணையர், சென்னை அவர்களின் நேரடி ஆய்வுக்கூட்ட அறிவுரையின் பேரிலும், 01.04.2026 முதல் 30.06.2026 வரை கால நீட்டிப்பு செய்து பொதுசுகாதாரபணிகள் தொய்வின்றி நடைபெறும் பொருட்டு ஒப்பந்த காலத்தினை, ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்த விகிதத்தில் மேற்படி பணிகளை மேற்கொள்ள மன்றம் பரிசீலித்து முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் பரிசீலனைக்கும்.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>2026 சட்டமன்ற தேர்தல் நடைபெற இருப்பதால், தேர்தல் விதிமுறைகளுக்கு உட்பட்டும், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி, மூன்று மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 598/2024/எச்1). | |
| 25.02.2026 | 736 | **<u>மன்றப்பொருள்: 09</u>**<br>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை அரசாணை (நிலை) எண். 10, நாள். 23.01.2023ன்படி நகராட்சியின் நிலைக்கு ஏற்ப ஒரே சீரான பணியிடம் தோற்றுவித்து வரையறைகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இப்பணியிடங்களில் காலிப்பணியிடங்களுக்கு ஏற்ப பொதுப்பிரிவு, பொது சுகாதாரப் பிரிவு மற்றும் பொறியியல் பணியின் கீழ் பணிபுரியும் ஓட்டுநர்கள், குடிநீர் பணி, தெருவிளக்கு பணி, இரவுக் காவலர்கள் முதலான பணியிடங்களில் தேவைக்கேற்ப வெளிக்கொணர்வு முகமை மூலம் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகராட்சியில் தட்டச்சு பணிகள் மற்றும் புள்ளி விபரக்குறிப்புகளை பதிவேற்றம் செய்ய கணினி பயிற்சி பெற்று ஏற்கனவே 2025–2026ம் ஆண்டில் பணி செய்து வரும் ஒப்பந்தப் பணியாளரை தொடர்ந்து 2026–2027ம் ஆண்டிற்கு (01.04.2026 முதல் 31.03.2027 முடிய) கால நீட்டிப்பு செய்தும், ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஊதியத்தினை வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>இந்நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் தட்டச்சு பணிகள் மற்றும் புள்ளி விபரக்குறிப்பு பணிகளை செய்து வரும் ஒப்பந்தப் பணியாளரை 2026–2027ம் ஆண்டிற்கு நீட்டிப்பு செய்யவும், ஊதியச் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | 2026–2027ம் ஆண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் தட்டச்சு பணி செய்வதற்கு பழைய ஊதிய விகிதத்திற்கு அனுமதிக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| 25.02.2026 | 737 | **<u>மன்றப்பொருள்: 10</u>**<br>களக்காடு நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0–ன் மூலம் கழிவுநீர் வாகனம் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. தற்போது கசடு கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் (STP, FSTP) நடைபெற்று வருகிறது. பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. நகராட்சிப் பகுதியில் உள்ள கழிவுநீர், செப்டிக் டேங்க் கழிவுகளை கழிவுநீர் வாகனத்தில் சேகரித்து சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்ல வேண்டியுள்ளதால், மேற்படி வாகனத்தை இயக்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநரின் மின்னஞ்சல் செய்தி மற்றும் புதிய பணி விதிகளின்படியும் தேவையான பணியிடத்திற்கு சுய உதவிக்குழு மூலம் ஆட்கள் தேர்வு செய்து பணிகளை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 1 கழிவுநீர் லாரி ஓட்டுனர் மற்றும் 1 உதவியாளர் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 2026–2027ம் நிதியாண்டிற்கு பணி செய்வதற்கு 2025–2026ம் ஆண்டிற்கான திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவரின் தினக்கூலி பட்டியல்படி ஓட்டுநருக்கு ரூ.598/–ம், உதவியாளருக்கு ரூ.540/–ம் வழங்கவும், மேற்படி ஊதிய செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>கசடு கழிவு மேலாண்மை திட்ட கழிவுநீர் உறிஞ்சு வாகனத்தை ஒப்பந்த அடிப்படையில் 2026–2027ம் ஆண்டிற்கு இயக்குவதற்கு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறை ஆணை (ந.க.எண். R.C.M1 /1640/ 2025)–ன்படி, நாள் ஒன்றுக்கான கூலி ஓட்டுநருக்கு ரூ.598/–ம், உதவியாளருக்கு ரூ.540/–ம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம். | அரசு விதிப்படி செயல்பட அனுமதி அளிக்கப்பட்டது. |
| 25.02.2026 | 738 | **<u>மன்றப்பொருள்: 11</u>**<br>களக்காடு நகராட்சிப் பகுதியில் டெங்கு நோய் பரவலை தடுக்கும் விதமாக அனைத்து குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள் மற்றும் திறந்தவெளி பகுதிகளில் உள்ள கழிவுநீர் மற்றும் கழிவு பொருட்களை அகற்றி டெங்கு நோய் கொசுப்புழு உற்பத்தியை தடுக்கும் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் 20 நபர்களை கொண்டு | அரசு விதிப்படி செயல்பட அனுமதிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | 2026-2027 ஆம் ஆண்டிற்கு பணிகளை செய்வதற்கும், பருவமழை காலங்களில் மட்டும் கூடுதலாக 20 நபர்கள் பணி செய்வதற்கும் 2025-2026ம் ஆண்டிற்கான திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறை ஆணை (ந.க.எண்.R.C.M1/1640/2025)-ன்படி, நாள் ஒன்றுக்கான கூலி ரூ.540/-வீதம் வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>டெங்கு நோய் கொசுப்புழு உற்பத்தியை தடுக்கும் பணியினை 2026-2027ம் ஆண்டிற்கு செய்வதற்கு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறை ஆணை (ந.க.எண்.R.C.M1/1640/2025)-ன்படி, நாள் ஒன்றுக்கான கூலி ரூ.540/- வீதம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம். | |
| 25.02.2026 | 739 | **<u>மன்றப்பொருள்: 12</u>**<br>களக்காடு நகராட்சி, படலையார்குளம் கிராமம், சர்வே எண். 530/2A2, 530/202 ஆகியவை மொத்தம் 1.21 ஏக்கர் நிலத்தினை நகர ஊரமைப்பு துறை இணை இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடித எண். XO1FMMK/2025/2025/TCP, நாள். 12.07.2025-ன்படி 24 மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் 24 மனைப்பிரிவிற்கு உரிய வளர்ச்சி கட்டணம், உள்கட்டமைப்பு கட்டணம் ஆகியவை நகர் ஊரமைப்பு துறைக்கு செலுத்தப்பட்டுள்ளதுடன் நகராட்சி கட்டணங்கள் முறையாக உரிய தலைப்பில் இணைய வழியாக செலுத்தப்படவேண்டும். மேற்கண்ட கடித எண்ணின் மூலம், களக்காடு சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.1284/2025 -ன்படி இந்நகராட்சிக்கு நன்கொடை பத்திரம் மூலமாக தபசில் 1ல் சாலை எண். 1 முதல் 5 வரையுள்ள1606.64 சதுர மீட்டர் சாலைகளும், தபசில் 6,7,8 ல் 151.68 சதுர மீட்டர் கொண்ட, பொது பயன்பாட்டுக்கு என நகராட்சிக்கு ஒதுக்கிடு செய்து வழங்கப்பட்டுள்ளது. அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள். 09.12.2020-ன்படியும், நகராட்சி நிர்வாக இயக்குநரின் சுற்றறிக்கை ந.க.எண். 12843/2022/டிபி-2, நாள். 20.10.2022-ன்படியும், மனைப்பிரிவில் கண்டுள்ள 1606.64 சதுர மீட்டர் சாலைகள், 151.68 மீட்டர் திறந்தவெளி ஒதுக்கீடு இடங்களை ஏற்கனவே தான பத்திரமாக ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களை நகராட்சி சொத்தாக ஏற்கவும், நகராட்சி பராமரிப்பில் கொண்டு வர மன்றத்தின் பார்வைக்கும் | நகர ஊரமைப்பு துறை இணை இயக்கநர் கடிதத்தின்படி நகராட்சி பொது பயன்பாட்டிற்கு பயன்படுத்த பார்வையிட்டு பதிவு செய்யப்படுகிறது. அரசு விதிப்படி செயல்படவும். |

| | | | |
|---|---|---|---|
| | | பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண். 1690/2025/எப்1). | |
| 25.02.2026 | 740 | **<u>மன்றப்பொருள்: 13</u>**<br>பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கடிதம் ந.க.எண் : 2265/2025/அ1 நாள்: 27.11.2025-ன்படி, களக்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 17ல் ஜவஹர் வீதி பகுதியில் அமைத்துள்ள கடைகள் 12 எண்ணம் மாத வாடகை முறையில் குத்தகைக்கு ஒப்படைக்க நாள்:12.12.2025 வெள்ளிக்கிழமை மறு பொது ஏலம் / மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கோருவதற்க்கு தினதந்தி நாளிதழில் நாள்: 30.11.2025ல் விளம்பரம் செய்யப்பட்டது.<br>மேலும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கடிதம் ந.க.எண் : 1719/2025/அ1 நாள்: 12.12.2025ன் படி களக்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 19ல் வியாசராஜபுரம் சேனையர் தெருவில் புதிய பேருந்து நிலை கடைகள் 17 எண்ணம் மற்றும் ஊனமுற்றோருக் ஒதுக்கப்பட்ட கடைகள் 2 எண்ணம் மொத்தம் 19 கடைகள் மாத வாடகை முறையில் குத்தகைக்கு ஒப்படைக்க நாள்: 30.12.2025 செவ்வாய் கிழமை மறு பொது ஏலம் / மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கோருவதற்க்கு தினதந்தி நாளிதழில் நாள்: 16.12.2025ல் விளம்பரம் செய்யப்பட்டது.<br>எனவே தினதந்தி நாளிதழில் நாள்: 12.12.2025ல் விளம்பரம் செய்தமைக்கு வறப்பெற்ற பட்டியல் தொகை ரூ.23,668/-ஐ மற்றும் நாள்: 16.12.2025ல் தினதந்தி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு வறப்பெற்ற பட்டியல் தொகை ரூ.17,766/-ஐ THE THANTHI TRUST, MADUARAI ROAD, TIRUNELVELI. அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்: 2265/2024/அ1). | அரசு விதிப்படி செயல்பட அனுமதி அளிக்கப்பட்டது. |
| 25.02.2026 | 741 | **<u>மன்றப்பொருள்: 14</u>**<br>களக்காடு நகராட்சி வியாசராஜபுரம் அண்ணாசாலை பகுதியில் உள்ள கடைகள், ஜவஹர் வீதி பகுதியில் உள்ள கடைகள், புதிய பேருந்து நிலைய கடைகள், சிங்கம்பத்து தெருவில் தினசரி கடைகள், மற்றும் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள வாகன காப்பகம் ஆகியவகைளை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருவதற்க்கு அறிவிப்பு கடிதங்கள் தொடர்த்து தமிழ் நாளிதழிகளில் விளம்பரம் | அரசு விதியினை பின்பற்றி செயல்பட அனுமதி அளிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | செய்யப்படபேண்டியுள்ளது, அதனால் 2/2026 முதல் 12/2026 வரை உள்ள காலங்களில் குத்தகை இனங்களுக்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்படும் நாளிதழ்களுக்கு (பட்டியல் தொகை) உத்தேச செலவினத்தொகை ரூ3,00,000/- வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்: 2265/2024/அ1). | |
| 25.02.2026 | 742 | **<u>மன்றப்பொருள்: 15</u>**<br>புதிய பேருந்து நிலைய வளாகத்தில் மூலதன மானியம் 2023-2024 திட்டத்தின் மூலம் கட்டி முடிக்கப்பட்ட இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்திற்கு பொது ஏலம் நடத்துவதற்கு மன்றம் அனுமதி பெறப்பட்டுள்ளது, மேலும் இருசக்கர வாகனம் ஒன்றிற்கு ரூ.10/- ம் மற்றும் மிதிவண்டி (சைக்கிள்) வாகனம் ஒன்றிக்கு ரூ.5/- ம் வசூல் செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்: 3001/2025/அ1). | அனுமதிக்கப்பட்டது. |
| 25.02.2026 | 743 | **<u>மன்றப்பொருள்: 16</u>**<br>களக்காடு நகராட்சி கீழப்பத்தையில் புதிய சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கு சட்டமன்ற அறிவிப்பு 2021-2022 திட்டத்தின் கீழ் அனுமதி பெறப்பட்டு சமுதாய நலக்கூடம் அமைக்கும் பணிக்கு ரூ1,00,00,000/- மதிப்பும் மற்றும் சமையலறை சுற்றுசுவர் அமைக்கும் பணிக்கு ரூ.50,00,000/- மதிப்பீட்டில் நடைபெறும் பணி தற்போது முடியும் தருவாயில் உள்ளது. மேலும் தற்போது சட்டமன்ற தேர்தல் தேதியை விரைவில் தேர்தல் ஆணையம் அறிவிக்க உள்ளதால் நகராட்சியின் வருவாய் இழப்பு ஏற்படாமல் இருக்க கீழப்பத்தை புதிய சமுதாய நலக்கூடத்தை முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றம் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்: 3001/2025/அ1).<br>2. தேர்தல் தேதி அறிவிக்கப்படுவதை முன்னிட்டு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஏல நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். | உரிய ஏல விதிமுறைகளை பின்பற்றி ஏலம் நடத்த அனுமதி அளிக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| 25.02.2026 | 744 | **<u>மன்றப்பொருள்: 17</u>**<br>களக்காடு நகராட்சி வியாசராஜபுரம் அண்ணாசாலை பகுதியில் அமைந்துள்ள (பொதுப்பணித்துறை அலுவலகம் அருகில்) முதல் தளத்தில் கட்டி முடிக்கப்படும் நிலையில் உள்ள கடைகள் மொத்தம் எண்ணம : 6 மற்றும் புதிய பேருந்து நிலையத்தில் மேற்கு பக்கத்தில் புதியதாக கட்டி முடிக்கப்படும் நிலையில் உள்ள கடைகள் மொத்தம் எண்ணம்:12 ஆகிய கடைகளுக்கு தற்போது சட்டமன்ற தேர்தல் தேதியை விரைவில் தேர்தல் ஆணையம் அறிவிக்க உள்ளதால், நகராட்சியின் வருவாய் இழப்பு ஏற்படமால் இருக்க வியாசராஜபுரம் அண்ணாசாலை பகுதியில் அமைந்துள்ள முதல் தளம் 6 கடைகள் மற்றும் புதிய பேருந்து நிலையத்தில் மேற்கு பக்கத்தில் உள்ள 12 கடைகள் ஆகியவைகளை முன் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோருவதற்கு மன்றம் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்: 3001/2025/அ1). | உரிய அரசு ஏல விதிமுறைகளை பின்பற்றி ஏலம் விட அனுமதி அளிக்கப்படுகிறது. |
| 25.02.2026 | 745 | **<u>மன்றப்பொருள்: 18</u>**<br>களக்காடு நகராட்சி, வார்டு எண்.12, நகரத்தெரு, கதவு எண்.2A/2-க்கு புதிய சொத்துவரி விதிக்கப்பட்டதில் வணிகம் என சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்கண்ட இடத்தில் மக்கள் ஆராதனை செய்யும் வழிபாட்டு தலமாக உள்ளது. எனவே, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 87 (a)-ன்படி, வழிபாட்டு தலங்களுக்கு சொத்துவரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. எனவே, கதவு எண்.2A/2, வரிவிதிப்பு எண்.171/012/900451-ஐ மேற்கண்ட விதியின்படி, கேட்பு பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்து, வார்டு எண்.12, நகரத்தெரு, கதவு எண்.2A/2-க்கு விலக்களிக்கப்பட்ட வரி விதிப்பதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்: 958/2025/அ1). | சொத்துவரி விலக்கு அளிப்பதற்கு உரிய அனுமதி ஆணையுடன் மீண்டும் பொருள் சேர்க்க அனுமதிக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| 25.02.2026 | 746 | **<u>மன்றப்பொருள்: 19</u>**<br>களக்காடு நகராட்சி, வார்டு எண்.17, ஜவஹர் வீதி பகுதியில் உள்ள (பழைய பேரூராட்சி அலுவலகம்) வணிக வளாக கடைகளுக்கு (மொத்த கடைகள் சிறியது 10 மற்றும் பெரியது 2 = 12 கடைகள்) நாள்.12.11.2025, 19.11.2025, 12.12.2025, 30.12.2025, 20.01.2026 மற்றும் 06.02.2026 ஆகிய நாட்களுக்கு பொது ஏலம் நடத்துவதற்கு நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டு மேற்கண்ட நாட்களில் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பொது ஏலத்தில் எந்த நபரும் கலந்து கொள்ளவில்லை. தற்சமயம் மேற்கண்ட கடைகளுக்கு திரு.கிருபாகரன் அவர்கள் வைப்புத் தொகை ரூ.4.00 இலட்சமும், மாத வாடகை ரூ.25,000/-ம் மற்றும் திரு.ஜா.ஜஸ்டின் பிரதீப் அவர்கள் வைப்புத் தொகை ரூ.5.00 இலட்சமும், மாத வாடகை ரூ.30,000/-ம் செலுத்த மேற்கண்ட இரண்டு நபர்களும் சம்மதம் கடிதம் வழங்கியுள்ளனர். மேற்படி ஆறுமுறை ஏலம் நடத்தப்பட்டு ஏலம் எடுக்க எவரும் முன்வராததால், அரசு மதிப்பினை விட (அரசு மதிப்பு ரூ.55,000/-) குறைவான தொகைக்கு சம்மதம் கடிதம் வழங்கப்பட்டதின்படி, மேற்படி வாடகை தொகை மற்றும் வைப்புத் தொகையினை குறைவு செய்ய நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் தலைமையில் குழுவின் ஒப்புதல் பெற்று, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பி தெளிவுரை பெறுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்: 2265/2025/அ1). | பெரும்பான்மை கவுன்சிலர்கள் (நகர்மன்ற உறுப்பினர்கள்) எதிர்ப்பு தெரிவித்ததால், இந்த தீர்மானம் இரத்து செய்யப்படுகிறது. |
| 25.02.2026 | 747 | **<u>மன்றப்பொருள்: 20</u>**<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவிப்பின்படி, இந்நகராட்சி பகுதிகளில் சுற்றித் திரியும் தெருநாய் இனங்களுக்கு இனப்பெருக்க கட்டுப்பாடு மற்றும் வெறிநோய் தடுப்பு மருந்துகள் செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இந்நகராட்சி மூலம் தெரு நாய்கள் மற்றும் வளர்ப்பு நாய்களுக்கு இனப்பெருக்க கட்டுப்பாடு மற்றும் வெறிநோய் தடுப்பு மருந்துகள் கொள்முதல் செய்து பயன்படுத்துவதற்கு ஒரு நாய்க்கு தடுப்பூசி மருந்தின் விலை ரூ.17/- வீதம் 250 எண்ணம் நாய்களுக்கு தொகை ரூ.4250/-ம், கருத்தடை அறுவை சிகிச்சை செய்வதற்கான மருந்துகள் தொகை ரூ.4235/-ம் மற்றும் நாய் பிடிக்கும் வலை | அரசு விதிப்படி செயல்பட அனுமதி அளிக்கப்படுகிறது. |

<table>
<tr><td></td><td></td><td>3 எண்ணம் ரூ.7200/- ஆக மொத்தம் ரூ.15685/- ஐ நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு.<br><u>அலுவலகக் குறிப்பு:</u><br>பொது சுகாதார நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>25.02.2026</td><td>748</td><td><u>மன்றப்பொருள்: 21</u><br>களக்காடு நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.19, புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள இரு சக்கர வாகன காப்பகம் மற்றும் வணிக வளாக கடைகள், வார்டு எண்.03, கீழப்பத்தையில் அமைந்துள்ள புதிய சமுதாய நலக்கூடம், வார்டு எண்.09, சிங்கம்பத்து கீழத்தெருவில் அமைந்துள்ள தினசரி சந்தை மற்றும் 3 பெரிய கடைகள், வார்டு எண்.17, ஜவஹர் வீதியில் உள்ள (பழைய பேரூராட்சி அலுவலகம்) வணிக வளாக கடைகள் மற்றும் வார்டு எண்.20, வியாசராஜபுரம் அண்ணாசாலை பகுதியில் உள்ள ஊனமுற்றோருக்கு ஒதுக்கப்பட்ட கடை ஆகியவைகளுக்கு 24.02.2026 அன்று பொது ஏலம் / முன் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அவற்றில் கீழ்கண்ட அட்டவணைப்படி ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் விபரம் பின்வருமாறு.
<table>
<tr><th>வ. எண்.</th><th>கடை எண்.</th><th>பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள்</th><th>ஏலக் கேள்விகள்</th><th>ஒப்பந்தப் புள்ளி தொகை</th><th>உயர்ந்தபட்ச ஏலத் தொகை ரூபாய்</th></tr>
<tr><td colspan="6">வார்டு எண்.17, ஜவஹர் வீதியில் உள்ள (பழைய பேரூராட்சி அலுவலகம்) வணிக வளாக கடைகள்</td></tr>
<tr><td>1.</td><td rowspan="2">1</td><td>திருமதி.M. ராஜேஸ்வரி</td><td>ரூ. 3900/-</td><td>கோரப் படவில்லை.</td><td rowspan="2">திரு.மு. இன்பராஜ் அவர்கள் உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.4000/- கேட்டுள்ளார்.</td></tr>
<tr><td>2.</td><td>திரு.மு. இன்பராஜ்</td><td>ரூ. 4000/-</td><td>கோரப் படவில்லை.</td></tr>
<tr><td>3.</td><td>2 முதல் 12 வரை</td><td colspan="4">ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை.</td></tr>
<tr><td colspan="6">வார்டு எண்.09, சிங்கம்பத்து கீழத்தெருவில் அமைந்துள்ள தினசரி சந்தையில் உள்ள 3 பெரிய கடைகள்</td></tr>
<tr><td>4.</td><td>57</td><td>திரு. சுந்தரலிங்கம்</td><td>ரூ. 4400/-</td><td>கோரப் படவில்லை.</td><td>திரு.சு. ராஜேஷ் அவர்கள்</td></tr>
</table></td><td>உரிய அரசு ஏல விதிமுறைகளை பின்பற்றி செயல்பட அனுமதி அளிக்கப்படுகிறது.</td></tr>
</table>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5. | | திரு.சு. ராஜேஷ் | ரூ. 4500/- | கோரப் படவில்லை. | உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.4500/- கேட்டுள்ளார். |
| 6. | 58 மற்றும் 59 | ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. | | | |
| **வார்டு எண்.09, சிங்கம்பத்து கீழத்தெருவில் அமைந்துள்ள தினசரி சந்தை (கடைகள்)** | | | | | |
| 7. | 1 முதல் 56 வரை | திரு. சேகர் | ஏலக் கேள்வி கோர முன் வரவில்லை. | கோரப் படவில்லை. | ஏலக் கேள்வி கோரப்படாததால் மறு பொது ஏலம் கோரலாம். |
| 8. | | திரு. கொம்பையா | ஏலக் கேள்வி கோர முன் வரவில்லை. | கோரப் படவில்லை. | |
| **வார்டு எண்.19, புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள வணிக வளாக கடைகள்** | | | | | |
| 9. | 16 மற்றும் 17 | ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. | | | |
| 10. | 18 | திரு. P. ஜெகதீசன் | ஏலக் கேள்வி கோரப் படவில்லை. | ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. ரூ. 3500/- | திரு.P. ஜெகதீசன் அவர்கள் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.3500/- கோரியுள்ளார். |
| 11. | | திரு.S. ராஜா | ஏலக் கேள்வி கோரப் படவில்லை. | ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. ரூ. 3400/- | |
| 12. | 19 | திரு. திலீபன் | ரூ. 3300/- | கோரப் படவில்லை. | திருமதி. ரதிலெட்சுமி அவர்கள் உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.3400/- கேட்டுள்ளார். |
| 13. | | திருமதி. ரதிலெட்சுமி | ரூ. 3400/- | கோரப் படவில்லை. | |
| 14. | 20 முதல் 23 வரை | ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. | | | |
| 15. | 25 முதல் 27 வரை | ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16. | 29 மற்றும் 30 | ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. | | | |
| 17. | 32 | ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. | | | |
| **வார்டு எண்.19, புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள இரு சக்கர வாகன காப்பகம்** | | | | | |
| 18. | -- | திரு.ஜா. ஜஸ்டின் பிரதீப் | ரூ. 340000/- | கோரப்படவில்லை. | |
| 19. | -- | திரு.J. ஜெபசிங் ராஜ பாண்டியன் | ரூ. 485000/- | கோரப்படவில்லை. | |
| 20. | -- | திரு. தனசிங் | ஏலக் கேள்வி கோரப்படவில்லை. | கோரப்படவில்லை. | |
| 21. | -- | திரு.வா. மாணிக்கம் | ஏலக் கேள்வி கோரப்படவில்லை. | கோரப்படவில்லை. | |
| 22. | -- | திரு.வா. இசக்கிபாண்டி | ஏலக் கேள்வி கோரப்படவில்லை. | கோரப்படவில்லை. | |
| 23. | -- | திரு.B. பலவேச கண்ணன் | ஏலக் கேள்வி கோரப்படவில்லை. | கோரப்படவில்லை. | திரு.வே. சண்முகநாதன் அவர்கள் உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.490000/- கேட்டுள்ளார். |
| 24. | -- | திரு.க. கொம்பையா | ஏலக் கேள்வி கோரப்படவில்லை. | கோரப்படவில்லை. | |
| 25. | -- | திரு.க. தமிழ் செல்வன் | ஏலக் கேள்வி கோரப்படவில்லை. | கோரப்படவில்லை. | |
| 26. | -- | திரு.முத்துக்குட்டி | ரூ. 440000/- | கோரப்படவில்லை. | |
| 27. | -- | திரு.சு. மைக்கேல்ராஜ் | ரூ. 446000/- | கோரப்படவில்லை. | |
| 28. | -- | திரு.K. சேக் உசேன் | ரூ.448000/- | கோரப்படவில்லை. | |
| 29. | -- | திரு.வே. சண்முகநாதன் | ரூ.490000/- | கோரப்படவில்லை. | |
| 30. | -- | திரு.மு. பாலகிருஷ்ணன் | ஏலக் கேள்வி கோரப்படவில்லை. | கோரப்படவில்லை. | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 31. | -- | திரு.K. பால்துரை | ரூ.353 100/- | கோரப் படவில் லை. | |
| **வார்டு எண்.20, வியாசராஜபுரம் அண்ணாசாலை பகுதியில் உள்ள ஊனமுற்றோருக்கு ஒதுக்கப்பட்ட கடை** | | | | | |
| 32. | 11 | ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. | | | |

மேற்படி அட்டவணையின்படி, வார்டு எண்.03, கீழப்பத்தையில் உள்ள சமுதாய நலக்கூடத்திற்கான பொது ஏலத்தில் ஒரு நபர் மட்டுமே ஏலத்தில் கலந்து கொண்டதால், மீண்டும் ஏலம் நடத்தலாம்.

வார்டு எண்.09, சிங்கம்பத்து கீழத்தெருவில் உள்ள தினசரி சந்தைக்கான (கடை எண்.1 முதல் 56 வரை) பொது ஏலத்தில் ஏலக் கேள்வி கோர முன் வராததால், மீண்டும் ஏலம் நடத்தலாம்.

வார்டு எண்.09, சிங்கம்பத்து கீழத்தெருவில் உள்ள தினசரி சந்தையில் உள்ள 2 பெரிய கடைகள் (கடை எண்.58, 59) பொது ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளாததால், மீண்டும் ஏலம் நடத்தலாம்.

வார்டு எண்.19, புதிய பேருந்து நிலையத்தில் உள்ள வணிக வளாக கடைகளுக்கான (கடை எண்.16, 17, 20, 21, 22, 23, 25, 26, 27, 29, 30 மற்றும் 32) பொது ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளாததால், மீண்டும் ஏலம் நடத்தலாம்.

வார்டு எண். 20, வியாசராஜபுரம் அண்ணாசாலை பகுதியில் உள்ள ஊனமுற்றோருக்கு ஒதுக்கப்பட்ட கடைக்கான (கடை எண்.11) பொது ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளாததால், மீண்டும் ஏலம் நடத்தலாம்.

வார்டு எண்.17, ஜவஹர் வீதியில் உள்ள (பழைய பேரூராட்சி அலுவலகம்) வணிக வளாக கடைகளுக்கான (கடைஎண். 2 முதல் 12 வரை) பொது ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளாததால், மீண்டும் ஏலம் நடத்தலாம்.

மேற்கண்ட கடை உரிமத்திற்காக உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியவர்களுக்கு கடை உரிமம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

வரிசை எண். 2, 5, 10, 13 மற்றும் 29 ஆகியோரின் ஏலக்கேள்விகளை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3001/2025/அ1).